# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.5/2024

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணி | மதம் | : இந்து |
| த/பெ | : ரங்கப்பன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 80 | கிராமம் | : உரிச்சி செங்கல்வராய கண்டிகை |
| தொழில் | : கூலி | வட்டம் | : திருத்தணி |

**09.02.2026**
**வா.சா. 3 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 3ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**<u>குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்</u>**

1. கஜேந்திரனுக்கு சொத்தை நானும் தாமோதரனும் விற்றோம் என்றால் ஆமாம். அந்த சொத்தின் நான்கு எல்லைகளின் விவரத்தை அந்த கிரைய ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. என்னுடைய பாகம் என்று சொல்வதில் பாகப்பிரிவினை நடந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதி ஏழுமலைக்கு சொத்து எதுவும் விற்கவில்லை என்றால் விற்கவில்லை. செங்கல்வராயன் சொத்து ஏழுமலையுடையதாகும். கஜேந்திரனுக்கு விற்ற சொத்து கந்தேசனின் பூர்வீக சொத்து என்றால் ஆமாம். கந்தேசன், ரங்கப்பன், சின்னப்பன், செங்கல்வராயன் ஆகியோர் எப்போதாவது பாகப்பிரிவினை செய்து கொண்டனரா என்றால் இல்லை. நானும் தாமோதரனும் கஜேந்திரனுக்கு விற்ற சொத்து சாலையின் ஓரத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

2. நான் விற்ற சொத்திற்கு தெற்கே சாலை உள்ளது என்றால் ஆமாம். எங்கள் சொத்திற்கு வடக்கே யார் சொத்து உள்ளது என்றால் என் சித்தப்பா சொத்து உள்ளது. என் சித்தப்பா சொத்திற்கு வடக்கே யார் உள்ளார் என்றால் என் சித்தப்பா சுப்பிரமணியின் சொத்தாகும். இந்த சொத்துக்களுக்கு மேற்கே யார் சொத்து என்றால் அனாதீனம் ஆகும். தெற்கே யார் சொத்து என்றால் எங்கள் பங்காளிகள் செங்கல்வராயன், சின்னய்யன் சொத்தாகும். வழக்கு சொத்திற்கு வாதி ஏழுமலை தாக்கல் செய்த பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சி அளிப்பதற்காக வாதி என்னை அழைத்து வந்தார் என்றால் இல்லை.

(மறு விசாரணை இல்லை)